## கரைதுறைப்பற்று பிரதேச சபை

## முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2019 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 31 யூலை 2019 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 10 ஒக்டோபர் 2019 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுயான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுளள் விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் இவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும்போதும் அவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருக்கின்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் உரியவாறு அங்கீகாரமளிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் தவறுகள் ஏற்படாத வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

(ஆ) **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கூட்டு மொத்தம் ரூபா 1,957,685 கிரயத்தில் காட்டப்பட்டிருந்த 40 காணிகளுக்குரிய உறுதிகள், நில அளவை வரைபடங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுச் சான்றிதழ்கள் என்பன கடந்த 06 ஆண்டுகளுக்கு மேலாக சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுப்படுத்த முடியாதிருந்தது. | சபைக்குரித்தான ஆதனங்களினை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் முறையான கருத்தொருமைப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கமைவாக வரையறுத்து அவற்றின் காணி உறுதிகளைப் பெற்று நில அளவை வரைபடங்கள் மூலமான அத்தாட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது அரச விலை மதிப்பீட்டாளரின் மூலம் அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தொடர்ந்து இந் நடவடிக்கையை மேற் கொள்வதன் மூலம் விரைவில் சபையின் பெயரில் உரிமைமாற்றம் செய்யப்படும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிகள் | | | |
| (i) அத்தியாயம் III இன் பிரிவு 24 | சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்களினை தயாரித்து அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு சபையின் ஆளுகைக்குட்பட்ட சகல வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியலைத் தயாரித்து மேலும் காலதாமதமின்றி அரச வர்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | விரைவில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சோலை வரி மதிப்பீட்டினை விரைவாக மேற்கொண்டு சோலைவரியினைக் கணிப்பீடு செய்து வருடாந்தம் சோலை வரியினை ஒவ்வொரு காலாண்டிலும் சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆதனங்களிலிருந்து உரியவாறு அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கடந்த கால அசாதாரண சூழ்நிலைகளால் சோலை வரி தொடர்பான ஏடுகள் அழிந்துள்ளமையினால் அவை தொடர்பாக மதிப்பீடுகள் கடந்த வருடம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை தொடர்பான தரவுகள் திரட்டப்பட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடந்த வருடம் அனுப்பப்பட்டுள்ளது. இதன் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இரண்டு கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை. 14 கிராமசேவையாளர் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவுகள் ஆதனவரி மதிப்பீட்டிற்காக அபிவிருத்திப் பிரதேசங்களாக 28.12.2018 திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ)** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 571 | காலம் கடந்த 10 பிடிபண வைப்புகள் மற்றும் 03 மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள் 02 வாடகை வைப்புக்கள் என்பவற்றின் கூட்டுமொத்தம் ரூபா312,198 தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | காலங்கடந்த நிலையிலுள்ள இத்தகைய வைப்புக்களினை சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு மீளளிக்கப்பட்டிரா-மைக்கான காரணங்களினை சபையானது உரியவாறு பரிசீலித்து அதன் பிரகாரம் அத்தரப்பினர்களினை உரியவாறு அடையாளங்கண்டு மீளளிப்பதற்கு அன்றேல் அவற்றினைச் சீர் செய்வதற்கு அன்றேல் முறையான அனுமதியுடன் உரியவாறு அரசிறைக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உரியவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 770 மற்றும் 771 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பின் தொடர் நடவடிக்கைகளினை அவ் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னராக மேற்கொண்டு முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும. | சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(இ)** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி | | | |
| கைந்நூல் பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கும் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்டிருக்கும் கைந்நூலின் பிரிவு 5.4.12 இற்கமைவாக குறித்தவொரு மாதத்தில் செலுத்தப்பட்டிருக்கும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விபரங்களை உடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க தொடர் நடவடிக்கையானது சபையினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பான பட்டியல் மாதாந்தம் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(ஈ)** பொது நிர்வாகச் சுற்றறிக்கை அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 29 திசெம்பர் 2016 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம். | சபையின் 20 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | சபையின் பயன்பாட்டிலுள்ள எரிபொருள் நுகரும் சகல வாகனங்களுக்கும் பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலரொருவர் முன்னிலையில் ஆகக் குறைந்தது வருடத்திற்கு ஒரு தடவையேனும் எரிபொருள் நுகர்வு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு வாகன நாளாந்த ஓட்ட அட்டவணையின் | சபையின் 35 வாகனங்களில்; 16 Trailer ஆகவுள்ளதால் அவற்றிற்கு எரிபொருள் நுகர்வு பரிசோதனை மேற்கொள்ள வேண்டியதில்லை. மிகுதி 19 வாகனங்களில் ரக்ரர்ஒன்று தொலைந்துள்ளமை. மற்றும் 09 வாகனங்களுக்கு எரிபொருள் நுகர்வுப்பரிசோதனை செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்கள் திருத்தத்தில் உள்ளமை, |

| | | |
|---|---|---|
| | மூலம் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | வாகனபதிவுப்புத்தகம் பெற்றுக்கொள்ளப்படாமை போன்ற காரணங்களினால் எரிபொருள் நுகர்வுபரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,295,430 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பானமுன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,110,537 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 442,500 | 441,223 | 441,223 | – | 421,500 | 392,910 | 392,910 | – |
| (ii) | வாடகைகள் | 17,402,500 | 16,761,854 | 16,761,854 | – | 17,098,600 | 16,186,770 | 16,186,770 | – |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,541,400 | 2,328,704 | 2,328,704 | – | 1,420,600 | 1,617,369 | 1,617,369 | – |
| (iv) | ஏனைய வருமானம் | 23,860,040 | 28,752,963 | 28,752,963 | 23,518,828 | 19,581,290 | 32,703,888 | 14,897,344 | 17,806,544 |
| | மொத்தம் | 43,246,440 | 48,284,744 | 48,284,744 | 23,518,828 | 38,521,990 | 50,900,937 | 33,094,393 | 17,806,544 |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண பிரதம செயலாளரிடம் நேர்முன்னைய வருடங்களுக்காகப் பெறப்பட வேண்டியிருந்த நீதிமன்ற | சபைக்குரித்தான நீதிமன்ற தண்டப்பணங்களினை அவை உரித்தாக்கப்பட்டு ஒரு வருட காலத்தினுள் | 18 ஏப்ரல் 2019 ஆம் திகதி கூட்டுமொத்தம் ரூபா 10,956,808.21 பெறப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| தண்டப்பணம் கூட்டுமொத்தம் ரூபா 15,617,241 இல் ரூபா 10,956,808 இனை அல்லது 70 சதவீதமானவற்றினை கடந்த 01 வருடத்துக்கு மேலாக உரியவாறு அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | பிரதம செயலாளரிடம் கோரிப் பெற்றுக் கொண்டு செயலாற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 ஏப்ரல் 2009 ஆம் திகதிய 1597/8 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத் திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள் மற்றும் மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்கள் முழுமையாக அறவீடு செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டுமொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | சகல தொலைத்தொடர்புக் கோபுரங்கள் தொடர்பிலான இத்தகைய நான்கு வகையான கட்டணங்களினையும் உரியவாறு வருடாந்தம் கணிப்பீடு செய்து அறவிட்டுக்கொண்டு சபையின் வருமானக் கணக்கிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த தொலைத் தொடர்பு தலைமை அலுவலகங்களுடன் தொடர்பினை மேற்கொண்டு குறித்த கட்டணங்கள் நடப்பாண்டில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | முள்ளியவளை, உப அலுவலகத்தின் ஆளுகைக்குட்பட்ட கூட்டுமொத்தம் 20 வகையான 162 வியாபார நிலையங்கள் மீளாய்வாண்டிற்கான நிரந்தர உரிமம் அல்லது வரிச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளாது வியாபார நடவடிக்கைகளிலீடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவை தொடர்பில் நாளதுவரை ஆக்கபூர்வமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர வியாபார உரிமம், வரிச் சான்றிதழ் பெறப்பட்டிருக்காது செயற்படும் வியாபார நிலையங்களினை அடையாளங்கண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் குறித்த வருடமொன்றுக்கான வியாபார வரியினைக் கணிப்பீடு செய்து உரிய காலத்தில் உரியவாறு அறவிட்டு சபையின் வருமானக் கணக்கிற்கு கொண்டுவருவதற்கு வருடாந்தம் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | முள்ளியவளை உப அலுவலகத்திற்குட்பட்ட வியாபார நிலையங்களில் 2018ம் ஆண்டிற்கான ஆண்டு வியாபார வரி அறவிடப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,199,358 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 3,319,470 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | சபைக்குரித்தான நீதிமன்ற தண்டப் பணங்களினை அவை உரித்தாக்கப்பட்டு ஒரு வருட காலத்தினுள் பிரதம செயலாளரிடம் கோரிப் பெற்றுக் கொண்டு செயலாற்றுவதற்கு சபையினால் ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 31 திசெம்பர் 2018 இல் உள்ளவாறான நிலுவைகளின் பிரகாரம் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 10,956,808.21 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் முத்திரை கட்டண நிலவை ரூபா 3,133,485 பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மிகுதி தொகை பெறுவதற்கான நடவடிக்கைகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகாதார வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 05 வீதி புனரமைப்பு செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு மீளாய்வாண்டில் ரூபா 14,777,577 தொகையொன்று சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டு செலவினமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் வெளியீட்டினை அடைந்து | குறித்த நிதியாண்டு காலத்தில் முடிவடைந்த வேலைகளின் அளவுகளுக்குரிய பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு மூலதன செலவினமாகக் காட்டப்படுவதுடன் அவற்றில் வழங்குனர்களுக்கு செலுத்தப்படாதுள்ள சான்றுப்படுத்தப்பட்ட சிட்டைகளின் பெறுமதிகள் மாத்திரமே சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு கொண்டு வரப்படுதல் | சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வேலைகள் யாவும் நிறைவடையும் நிலையில் உள்ளன. |

| | | |
|---|---|---|
| கொள்வதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு சபை தவறியிருந்தது. | வேண்டும். எவ்வாறாயினும் குறித்த செயற்றிட்டங்களினை உரிய காலத்தில் நிறைவேற்றி அவற்றிலிருந்தான பயன்பாட்டினை பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுக்க சபையானது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை (Outcome) அடைவதற்கு தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 02 செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு ரூபா 10,571,160 தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு (Output) அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மூலம் சிறுவர் பொழுதுபோக்கு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் கடந்த 03 தொடக்கம் 04 ஆண்டுகளாக அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொதுமக்கள்/பொதுமக்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் கருத்துக் கணிப்பீடு மற்றும் செயற்திட்ட அமைவிடங்கள் தொடர்பிலான சாத்தியப்பாட்டு ஆய்வு (Feasibility Analysis) மேற்கொள்ளப்பட்டிருக்காது மேற்கொள்ளப்பட்ட இச்செயற்றிட்டங்களுடன் தொடர்புடையவர்களினை அடையாளங்கண்டு, விசாரணைக்குட்படுத்தி குறித்தசெலவிடப்பட்டிருக்கும் கூட்டுமொத்தம் ரூபா 1.06 மில்லியன் பணப் பெறுமதி விரையத்திற்கு வகை கூறுவதற்கு அல்லது உரியவாறு செயற்படுத்துதற்கு அல்லது நிதி விரையத்தை உரியவாறு அறவிட்டுக்கொள்வதற்கு சபை/ உள்ளூராட்சி ஆணையாளர்/ பிரதம செயலாளர் ஆகியோர் உரியவாறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை எடுத்தல் வேண்டும். | முள்ளியவளை ஐயனார் குடியிருப்பில் வாராந்த சந்தை வேலைத்திட்டமானது ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில், மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்பாக அத்துமீறி பொது மக்களினால் வாராந்த சந்தை ஆரம்பிக்கப்பட்டது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டும் தடுக்க முடியாத நிலையில் உள்ளது.மேலும் நெல்சிப் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட உண்ணாப்பிலவு சிறுவர் பூங்கா பிரபல்யமடையாது போய்விட்டது. எதிர்காலத்தில் இதில் ஒரு வருமானத்தை ஈட்டும் வியாபார நிலையம் அமைக்கப்பட்டு வருமானத்தை பெற்றுத் தரும் நிலையமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. |

### (இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூழங்களை கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் மேற்கொள்வதற்கென கட்டடம் கூட்டுமொத்தம் ரூபா 5,027,617 பெறுமதியில் கட்டட நிர்மாண வேலைகள் முடிவுறுத்தப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நாளதுவரை சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய இந் நடவடிக்கைகளை இக் கட்டட நிர்மாணித்தல் நோக்கத்துடன் தொடர்புபடுத்தி பயன்மிக்க வகையில் மேறகொள்வதற்கு சபையினால் விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | முள்ளிவாய்க்கால் திண்மக்கழிவை பசளையாக மாற்றும் நிலையம் அமைத்தலுக்கான வேலைத்திட்டங்கள் நிறைவுறுத்தப்பட்டு தற்போது தரம் பிரித்தல் மற்றும் அவற்றினை பசளையாக மாற்றுவதற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. |

### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | உள்ளூராட்சி அமைச்சின் அனுமதியுடன் முன்னெடுப்பதற்கு ஆவணங்கள் அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளிலும் மீளாய்வாண்டிலும் நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கூட்டுமொத்தம் 189 எண்ணிக்கையான நூல் நிலையப் புத்தகங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் நன்கொடையாகப் பெறப்பட்டு நூலகங்களில் பயன்படுத்தப்பட்டுவரும் சகல புத்தகங்களினதும் பெறுமதிகள் சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் விலை மதிப்பீட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு விலைநிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த மற்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாட மற்றும் அலுவலக உபகரணங்களின் 297 உருப்படிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் நன்கொடையாகப் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுவரும் சகல தளபாட மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதிகள் சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். | விலைமதிப்பீட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டு விலைநிர்ணயம் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### (அ) பதவி வெற்றிடங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபைக்குரிய 15 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்காமையினால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்கக் கூடிய சபையினது வேலைகள், அபிவிருத்தித் திட்ட செயல்நிறை வேற்றல்களில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | சபையின் நாளாந்த கருமங்கள் மற்றும் செயல்நிறைவேற்றலுக்கு வேண்டிய இரண்டாம் நிலை, ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை பெற்றுக் கொடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்/பிரதம செயலாளரினால் ஆக்கபூர்வமான | எமது NP/14/44(1)/1/1/E1/Cadre /2018-01 ஆம் இலக்க 2018 செப்தெம்பர் 19ம் திகதிய கடிதம் மூலம் வருமான பரிசோதகருக்கான ஆளணி பற்றாக்குறைக்கான கோரிக்கை கடிதம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | வைக்கப்பட்டிருந்து. |
| (ii) சபை அலுவலகப் பணியாளர்களைப் பயன்படுத்தி வருமானப் பரிசோதகர் மற்றும் சந்தை மேற்பார்வை யாளர்களுக்குரிய கடமைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டிருப்பதால் சபையின் வினைத்திறனான வருமான சேகரிப்பு, திருப்திகரமான அலுவலகப் பணியாளர் சேவைகள் என்பன பாதிப்படைந்துள்ளது. ஆளணி வெற்றிடங்களை நிரப்பி சபையை வினைத்திறனான முறையில் நடத்திச்செல்வதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை உரியவாறு பெற்றுக் கொடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்/ பிரதம செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களுக்கான கோரிக்கை கடிதம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரூடாக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்து. |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (i) சேவையைவிட்டு நீங்கிய இறந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 07 அலுவலர்களது பதவியினர் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 658,278 இனை கடந்த 10 வருடங்களாக அறவீடு செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளெவையும் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXV இன் பிரிவு 4 இன் உப பிரிவின் 4.2.4 பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காது தொடர்ந்தும் நிலுவையாகக் காட்டப்பட்டுள்ளது. | (i) பதிவழிப்பு செய்யப்படவேண்டியதாக சபையினால் கருதப்படும் பதவியினர் கடன் நிலுவைகள் தொடர்பில் சகல வழிகளிலும் பரிசீலித்து உரியவாறு ஆதாரப்படுத்திய பின்னர் முறையான அனுமதியினைப்பெற்று பதிவழிப்பு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>(ii) கட்டடங்கள் திணைக்களத்தில் செலுத்தப்பட்டதற்கான முறையான ஆவணத்தை கட்டடங்கள் திணைக்களத்தில் பெற்று உறுதிப்படுத்தி சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>(iii) சீர்செய்யப்படவேண்டிய நிலையிலுள்ளதாக அறியக்கொடுக்கப்பட்டிருக்கும் 03 அலுவலர்களினது பதவியினர் கடன்நிலுவைகளை தாபன | நடப்பாண்டில் சீர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | விதிக்கோவையின் அத்தியாயம் XXV இன் பிரிவு 4 இன் உப பிரிவின் 4.2.4 பிரகாரம் சீர்செய்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |
| (ii) | வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 03 அலுவலகர்களின் இடர்கடன் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 264,129 இனை கடந்த 03 தொடக்கம் 04 ஆண்டுகளாக அறவிட்டுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்த திணைக்களங்கள் ஊடாக அறவிடப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளினை சபையானது மேற்கொள்ளல் வேண்டும். | நடப்பாண்டில் சீர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (iii) | கூட்டுமொத்தம் ரூபா 194,446 பெறுமதியான 04 அலுவலகர்களது பதவியினர் கடன்களுக்கான மாதாந்த தவணைக் கட்டணங்கள் 01 தொடக்கம் 02 ஆண்டுகளாக அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரை அறவிடப்படாதுள்ள மூன்று அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பதவியினர் கடன்களின் நிலுவைகளை உரியவாறு அறவிட்டுக்கொள்வதற்கு சபையால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் சீர்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சபைக்குரித்தான 15 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 01 தொடக்கம் 02 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபைக்குரித்தானதாகக் காணப்படும் 15 வாகனங்களின் பெறுமதிகள் அரச விலை மதிப்பீட்டாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் மூலமாக மதிப்பிடப்பட்டு சபையின் நிதிக்கூற்றுக்களுக்கு அவற்றின் பெறுமதிகள் கொண்டுவரப்படுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | சபைக்குரிய 15 வாகனங்களுக்குரிய பெறுமதிகள் இயந்திரப் பொறியிலாளர் ஒருவர் மூலமாக பெறுமதி மதிப்பிடப்பட்டு நடப்பாண்டில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| **(அ)** அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு சபையின் பயன்பாட்டிலுள்ள 10 வாகனங்களுக்குரிய வாகனப் பதிவுப் புத்தகம் பெறப்பட்டிருக்க கடந்த 07 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் உரியவாறு வாகனப் பதிவுப் புத்தகங்களை பெற்று சபைக்குரித்தான நிலையிலுள்ள வாகனங்களை பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் பதிவுப்புத்தகம் இல்லாதவாகனங்களுக்கு பதிவுப்புத்தகங்கள் பெறதொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **(ஆ)** அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 05 வாகனங்களின் உரிமை பிரதேச சபைக்கு மாற்றம் செய்யப்பட்டிராது கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக சபையினால் பயன்படுத்தப்படுகின்றது. | (i) 2013 ஆம் ஆண்டு தொலைக்கப்பட்ட வாகனம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு நிதி ஒழுங்குவிதி 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கைகளை விரைவாக எடுத்தல் வேண்டும்.<br><br>(ii) ஏனைய நான்கு வாகனங்கள் தொடர்பில் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற வாகனங்களினை சபைக்கு உரித்தானதாக்குவதற்குரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்படுதல் வேண்டும். | வாகனங்கள் உரிமைமாற்றம் செய்வதற்காக வரி அனுமதிப்பத்திரம் பெற தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

### 3.4.3 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 04 வாகனங்கள் கடந்த 03 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிராது களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது. | (i) வாகனத்திற்குரிய பதிவுப்புத்தகத்தினை பெற்று பயன்மிக்க வகையில் உபயோகிக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.<br>(ii) திருத்தம் செய்யப்படவேண்டிய வாகனத்தை திருத்தம் செய்து பயன்படுத்த சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.<br>(iii) ஏனைய இரு வாகனங்களுக்கான வரி அனுமதிப்பத்திரம் பெற்று பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இவற்றிற்கு வரிஅனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபையினால் உபயோகிக்கப்பட்டு வந்திராத கணனிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திர வகைகளுக்கென கூட்டுமொத்தம் ரூபா 137,200 பெறுமதியுடைய ரோணர்கள், கொள்வனவு செய்யப்பட்டு கடந்த 02 வருடங்களாக பயன்பாடின்றி களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | தற்போது கிடைக்கப்பெற்றுள்ள பொருத்தமான அச்சியந்திர விபரங்களை கணக்காய்விற்கு அறியத்தருவதுடன் அத்தகைய ரோணர்கள் செயல்வலு காலத்துடன் பயன்பாட்டுக்குட்படக்கூடிய நிலையிலுள்ளனவா என பரிசீலித்து பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அன்றேல் பொருத்தமான இயந்திரங்கள் சபைக்கு கிடைத்திருக்காத நிலையில் அவை கொள்வனவு செய்யப்பட்டமைக்கான காரணத்தை சபையானது பரிசீலித்து சம்பந்தப்பட்ட அலுவலர்/களிடம் அப் பண விரையத்தை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.4.4 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கையின் பிரகாரம் சபையின் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மற்றும் செம்மலை உப அலுவலகங்களின் 67 நூல் | சோர்வுக்கான காரணங்களை அறிந்து தொடர்புடைய நூலகரிடம்/ சம்பந்தப்பட்ட | வருடாந்த கணக்கெடுப்பின் படி உப அலுவலகங்களில் சோர்வாக காட்டப்பட்ட புத்தகங்கள் தற்போது |

| | | |
|---|---|---|
| நிலையப் புத்தகங்கள் சோர்வாகக் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களோ அல்லது பின்தொடர் நடவடிக்கைகளோ நாளதுவரை கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | தரப்பினரிடம் அறவிட்டுக்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | சீர்செய்யப்பட தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது . |

### 3.4.5 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் முறையான அனுமதி பெறப்பட்டிருக்காது சபையின் NPLL 7767 ஆம் பதிவிலக்கமுடைய டபிள்கப் வாகனமானது யாழ்ப்பாண மாவட்டத்திற்கு பிரயாணத்திலீடுபடுத்தியதன் போது 25 யூலை 2018 அன்று விபத்துக்குள்ளாகியிருந்தமை தொடர்பிலான காரணம், நட்டத்தின் அளவு, பொறுப்பாக்கல் போன்றவற்றினை தீர்மானிக்கும்முகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 104 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய நடவடிக்கைகள் நாளதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 103 மற்றும் 104 என்பவற்றுக்கமைவாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதற்கு சபையானது விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். | வாகனத்தில் பயணித்த உத்தியோகத்தரிடமிருந்து விபத்து தொடர்பான அறிக்கை பெறப்பட்டுள்ளதுடன் பொலிஸ் விசாரனையும் இடம்பெற்றது. இனிவரும் காலத்தில் செயலாளர் தலைமையிலான உள்ளக விசாரணைக்குழு அமைத்து விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 364,653 பெறுமதியான 05 வகையான அலுவலகத் தேவைப்பொருட்கள் உரியவாறு தேவைக் கேற்ப திட்டமிடப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்டிருக்காது சிக்கனமற்ற அளவுகளில் | (i) சபைக்கு தேவையான பொருட்களின் வேண்டுதல்களினை அலுவலர்களிடம் கோரிப் பெற்று அதற்கமைவாக கொள்வனவுத் திட்டத்தை தயாரித்து பெறுகைத் திட்டத்திற்கமைவாக பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>(ii) பாவனைக் காலம் முடிவடைய | இனிவரும் காலங்களில் இவை கவனத்தில் கொள்ளப்பட்டு சீர்செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| பெறப்பட்டு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | முன்னர் அலுவலக தேவைப் பொருட்களை பயன்மிக்க வகையில் உபயோகப்படுத்த சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

**3.6 பெறுகை**

**3.6.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையானது உடன் அடுத்துவரும் வருடத்திற்கான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பவற்றினை தயாரித்து அனுமதி பெறப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களிற்கான பெறுகை நடைமுறையும் கொள்வனவு நடவடிக்கைகளுக்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**3.6.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 462,000 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 10 இலத்திரனியல் உபகரணங்கள் 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டியின் அத்தியாயம் 7 இன் பிரிவு 7.11 இன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழுக்கள் ஒவ்வொரு வேறுபட்ட வகையான பொருட்களுக்குமாக தனித்தனியே நியமிக்கப்பட்டு அவற்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னரே பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்படும் பொருட்களுக்கு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு சிபாரிசுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்டிருந்த வேலைத் திட்டங்களில் கூட்டுமொத்தம் ரூபா 21,500,000 பெறுமதியான 06 மூலதன வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது. இதற்குரிய காரணங்களும் கணக்காய்வுக்கு அறியக் கிடைத்திருக்கவில்லை. | சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டமானது பொருத்தமான அடிப்படைகளினை ஆதாரமாகக் கொண்டு பயன்மிக்க வகையில் தயாரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு கருத்துப் பெறலுக்காக காட்சிப்படுத்தப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் வருடாந்த செயற்பாடுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டு உரிய காலத்தில் ஆக்கபூர்வமாக நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்தும் எதிர்வரும் காலங்களிலும் பாதீட்டுத் தயாரிப்பின் போது சரியான பொறிமுறை கையாளப்பட்டு சபைத் தீர்மானங்களுக்கு அமைவாக தயாரிக்கப்படும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டு மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனை நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |